பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 126

செவ்வாய்க்கிழமை
01 ஏப்ரல் 2025

பங்குனி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மியான்மர் நிலநடுக்கம்; உயிரிழப்பு 2,000+

மியான்மரில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக உயிரிழந்தவர்களின் 11

# கொடூரமான கொலைகளில் படையினரும் ஈடுபட்டனர்!

ஒப்புக்கொள்கின்றார் பொன்சேகா



**கொழும்பு, ஏப். 1**

**மிருசுவிலில் அப்பாவிக் குடும்பமொன்று கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டது. அதேபோல 11 மாணவர்கள் படையினரால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். இப்படியான செயல்களில் ஈடுபட்ட படையினரைப் பாதுகாக்க முற்படும் அரசியல்வாதிகளே தேசத்துரோகிகள் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.** 11

தபால்மூல வாக்களிப்பு

## வாக்காளர் அட்டைகள் சனியன்று கையளிப்பு!

கொழும்பு, ஏப். 1
தபால்மூல வாக்களிப்புக்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் சனிக்கிழமை தேர்தல்கள் ஆணைக் குழுவுக்குக் கையளிக்கப்படும் என அரச அச்சகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
இந்த வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை ஒவ்வொரு 11

## நவம்பர் மாதம் அடுத்த பட்ஜெட்

03

## புலம்பெயரிகளுக்கு ஏற்ப ஆடுகிறதாம் அநுர அரசு!

கொழும்பு, ஏப். 1
தேசிய மக்கள் சக்தி ஆட்சியைப் பிடிப்பதற்கு புலம்பெயரிகள் ஒத்துழைப்பு வழங்கினார்கள். எனவேதான் புலம்பெயரிகளின் தாளத்துக்கு அரசாங்கம் ஆடிவருகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குற்றஞ்சாட்டியுள்ளார்.
பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே 11

## அரசைக் கவிழ்ப்பது நடக்காத காரியம்!

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 1
மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கவிழ்க்கவே முடியாது. அவ்வாறு செய்யக்கூடிய நபர்களும் எதிரணியில் இல்லை என்று 10

கீரிமலையில் உள்ள

## ஜனாதிபதி மாளிகையை இந்துப் பீடத்துக்குத் தருக

யாழ்ப்பாணம், ஏப். 1
கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்துக்கு வழங்கவேண்டும் என்று இலங்கை சைவ மகாசபை கோரிக்கை விடுத்துள்ளது. 11

## நாயாற்றுக் கடலில் மூழ்கி யுவதியொருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஏப். 1
முல்லைத்தீவு நாயாறு முகத்துவாரப் பகுதியில் நீராடச் செய்த யுவதியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
உடையார்கட்டு இருட்டுமடு பகுதியைச் சேர்ந்த யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 11

## குளுக்கோமா அதிகரிக்கிறது

03




## டிரான் அலஸிடம் துருவியது சி.ஐ.டி.



கொழும்பு. ஏப். 1
முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், குற்றப் புலனாய்வுத் திணைக்கத்தில் நேற்று ஆறு மணிநேரம் விசாரணைக்கு உட்படுத் 11

## எரிவாயு விலை அதிகரிப்பு!

கொழும்பு. ஏப். 1
லாப்ஸ் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.
இதன்படி, 12.5 கிலோக்கிராம் லாப்ஸ் எரிவாயு சிலிண்டரின் விலை 420 ரூபாவால் அதிகரித்து புதிய 11

## பெற்றோல் விலை 10 ரூபா குறைப்பு

கொழும்பு, ஏப். 1
நாட்டில் எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன்படி பெற்றோலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 299 ரூபா நிர்ணயிக்கப்பட் 11

6 மாதங்களாக

## கோமாவில் இருந்தவர் நேற்றுக் காலை சாவு

யாழ்ப்பாணம், ஏப். 1

விபத்தால் ஏற்பட்ட பாதிப்புகளைத் தொடர்ந்து, கடந்த ஆறு மாதங்களாக கோமாவில் இருந்தவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.
சகாயராஜா யேசுதாஸ் பெரேரா (வயது 35) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். 11

## வீதி மின்விளக்குகளுக்கு ரூ.620 மில்லியன் நிலுவை

இருளில் மூழ்குமா வடக்கு?

யாழ்ப்பாணம், ஏப். 1
வடக்கு மாகாணத்தில் 63 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றுக்காக வருடமொன்றுக்கு 620 மில்லியன் ரூபா கட்டணம் செலுத்தப்படவேண்டும். இந்தக் கட்டணம் இன்னமும் செலுத்தப்படாது நிலுவையிலுள்ளது என்று இலங்கை மின்சாரசபையின் வடமா 11

மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4034 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 35 66 78 79 |
| விசேட எழுத்து | B |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1101 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 31 35 41 42 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0060 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 2 2 8 4 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2140 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 23 |
| வெற்றி இலக்கங்கள் | 22 38 45 59 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5792 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 2 7 9 6 1 4 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1822 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 11 21 22 35 |
| விசேட எழுத்து | Q |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0366 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 3 6 3 4 |

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தால் உலகப்போரில் சிக்கும் இலங்கை

## மக்கள் போராட்ட முன்னணி எச்சரிக்கை

**கொழும்பு, ஏப்.1**

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணத்தின்போது கைச்சாத்திடப்படவுள்ள இந்திய-இலங்கை இராணுவ ஒப்பந்தம் இலங்கையை உலகப்போரில் தள்ளும் என்று மக்கள் போராட்ட முன்னணியின் நிர்வாக உறுப்பினர் புபுது ஜயகொட எச்சரித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்துடனான கொடுக்கல், வாங்கல் அனைத்தும் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்டு அதற்கான தரவுத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டு அதை நிர்வகிக்கும் பொறுப்பு சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுமார் ஆயிரத்து 500 அரச நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல்கள் அந்த நிறுவனத்தின் வசமாகியுள்ளன. சீனாவின் இராணுவச்சக்திக்கு எதிரான அணியை உருவாக்கும் நோக்கத்துடன் இலங்கையுடன் இந்தியா இராணுவ ஒப்பந்தம் ஒன்றில் தந்திரரீதியாக ஒப்பமிடவுள்ளது என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள இந்த ஒப்பந்தத்தால் 220 இலட்சம் இலங்கையர்கள் மாபெரும் உலகப்போரில் பலியாகக்கூடிய சாத்தியம் உள்ளது-என்றார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0500 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 4 5 6 7 2 8 |

**Super Ball**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2766 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 35 36 37 60 |

**சனிதா**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 03 46 59 79 |
| வெற்றி வாரம் | 4927 |

**லக்ன ராசி**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| | மகரம் |
| வெற்றி இலக்கம் | 09 23 36 54 |
| சீட்டிழுப்பு வாரம் | 4478 |

**KAPRUKA**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 32 |
| வெற்றி இலக்கம் | 06 09 13 15 |
| வெற்றி வாரம் | 1942 |

**அத கோடிபதி**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 32 44 51 76 |
| வெற்றி வாரம் | 2592 |

**JAYODA**

| | |
|---|---|
| திகதி | 31.03.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 15 22 37 51 |
| வெற்றி வாரம் | 2116 |

# புலிகளின் ஆதரவாளர்களால் இலங்கைக்கு அச்சுறுத்தலாம்

## தயாசிறி கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.1

புலிகளின் ஆதரவாளர்களான புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களால் இலங்கைக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இதற்கு முன்னர் 58 பேருக்கு எதிராகத் தடைகளை விதித்திருந்தபோதும், பிரிட்டன் தடைவிதிப்பது இதுவே முதற்தடவையாகும். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் இவ்வாறான தடைகள் விதிக்கப்படுவது பொருத்தமற்றது. போரில் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமாகும். ஆனால் அது தொடர்பான விசாரணைகள் உள்ளகப் பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்படவேண்டும். கடந்த ஆண்டு உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் அந்தச் செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளது.

பட்டலந்த மாத்திரமின்றி நாட்டில் 46 வதைமுகாம்கள் காணப்பட்டன. அவற்றைத் தவிர்த்து பட்டலந்த தொடர்பாக மட்டும் பேசமுடியாது. ரணில் விக்கிரமசிங்கவை முடக்குவதற்காகவே பட்டலந்த விவகாரம் கையிலெடுக்கப்படுகின்றது-என்றார். (எ-இ)

# உள்நாட்டு விமானசேவையை அதிகரிக்க திட்டங்கள்

கொழும்பு, ஏப்.1

உள்நாட்டு விமானசேவைகள் அதிகரிப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்குத் தேவையான சட்டங்களைத் திருத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)



# குறுஞ்செய்திப் பரப்புரையை நிறுத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஏப்.1

குறுஞ்செய்திகள் மற்றும் குரல் அஞ்சல்கள் மூலம் தேர்தல் பரப்புரை மேற்கொள்வதை நிறுத்துவதுதொடர்பாக தொலைபேசிநிறுவனங்களுக்கு அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தெற்கு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிந்தக குலரத்ன, மக்களின் தனியுரிமையை மீறும்வகையில் குறுஞ்செய்திகள், குரல் பதிவுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அரசியற் பரப்புரைகளை நிறுத்துவதற்கு தொலைபேசி நிறுவனங்களுக்கு உத்தரவிடப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேர்தல் அமைதிக் காலத்தில் சமூக ஊடகங்களில் பதிவேற்றப்படும் இணைப்புகளை நீக்குவது தொடர்பாக சமூக ஊடகத் தளங்களான மெட்டா, ரிக்ரொக், யூடியூப் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சாமர சம்பத்தின் மெத்தைக் கனவில் மண் அள்ளிப்போட்ட மருத்துவர்கள்

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, படுப்பதற்கு மெத்தை வேண்டும் என்று கோரியிருந்தநிலையில், அந்தக்கோரிக்கை மருத்துவர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று வெலிக்கடைச் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலை ஆணையாளருமான காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். முதுகுவலி இருப்பதால் மெத்தை வழங்கவேண்டும் என்று சாமர சம்பத் கோரியிருந்தநிலையில், மருத்துவர்களின் பரிந்துரைக்கமைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அவருக்கு மெத்தை தேவைப்பட்டால் [illegible] அவர் பெற்ற சிகிச்சைகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அவற்றை சிறப்பு மருத்துவர்களின் மூலம் பரிசீலனைக்கு உட்படுத்திய பின்னர் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-25-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடுத்த 'பட்ஜெட்' நவம்பர் மாதம்

கொழும்பு, ஏப்.1

**அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் முன்வைக்கப்படும். எதிர்வரும் ஜுன் மாதம் முதல் யோசனைகள் உள்வாங்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தேர்தல் பரப்புரைக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி இன்னமும் 8 மாதங்களுக்குள் முடிக்கப்படவேண்டும். தற்போது நிதி உள்ளது, நிதிக்குரிய வேலைத் திட்டங்களை உரியவகையில் முன்னெடுக்கவேண்டும். திறைசேரிக்கு இந்த ஆண்டு தான் அதிகளவு வருமானமும் வரவுள்ளது. அதனால் நாம் தடையின்றி நிதியை வழங்குவோம். உரியவகையில் திட்டங்கள் நிறைவுசெய்யப்படவேண்டும். அதிகாரிகளுக்குத் தற்போது வேலைப்பளு அதிகம் என்பதால் சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு கிராமங்களில் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைமைத்துவமும் அவசியம். கிராமத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்குரிய அரசியல் தலைமைத்துவம்தான் பிரதேச சபையாகும். மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படக்கூடிய கிராம அரசாங்கமொன்று அவசியம். இருதரப்பும் இருவழிகளில் சென்றால் திட்டங்களை உரியவகையில் முன்னெடுக்கமுடியாது. கிராமங்களைக் கட்டியெழுப்புவதற்குரிய ஆணையையும் எமக்குத் தாருங்கள். அரசாங்கமும் எமது, கிராமமும் எமது என்ற நிலை உருவாகும் என நம்புகின்றோம்-என்றார். (எ-44)

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு

## பெண் சட்டத்தரணியை விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்று பணிப்பு


கொழும்பு, ஏப்.1

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி பி.உதயங்கனியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சட்டத்தரணி உதயங்கனி எதிர்வரும் 28ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பெண் சட்டதரணி நீதிமன்றத்துக்குத் தலைவணங்காமல் உள்நுழைந்தமையானது நீதிமன்றுக்கு உரிய மிரயாதையை செலுத்த தவறியமைக்குச் சமம் என்ற குற்றாச்சாட்டின் கீழ் புத்தளம் உயர் நீதிமன்ற நீதிபதி நதி அபர்ணா சுவந்தருகொட சட்டதரணியை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார். (எ-இ)

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் தலைவராக மீளவும் ஷம்மி

2025- 2027ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தலைவராக ஷம்மி சில்வா மீண்டும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் அவர் தொடர்ந்து 4 ஆவது முறையாக ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஷம்மி சில்வா போட்டியின்றித் தெரிவுசெய்யப்படும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும். (எ-இ)



## விகாராதிபதி கொலை; சந்தேகநபருக்கு மறியல்

அநுராதபுரம், ஏப் 1

அநுராதபுரம் எப்பாவல கிரலோகம விகாரையின் விகாராதிபதியை கூரிய ஆயுதம் ஒன்றினால் வெட்டிக்கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பல கோணங்களிலும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர். (ச-இ)

## அதிகரிக்கும் 'குளுக்கோமா'

கொழும்பு, ஏப்.1

"குளுக்கோமா" எனப்படும் கண் அழுத்த நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 3.8 சதவீதம் உயர்வடைந்துள்ளது என கண் சத்திரசிகிச்சை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தநோயைக் கட்டுப்படுத்த ஆரம்பத்திலேயே உரிய சிகிச்சை பெற வேண்டும் என்றும், இல்லாவிட்டால் பார்வையை இழக்கநேரிடும் என்றும் கண் சத்திரசிகிச்சை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## இதுவரை 306 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப்.1

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக நேற்றுமுன்தினம்வரை 302 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இரு முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக 274 முறைப்பாடுகளும், ஏனைய விடயங்கள் தொடர்பாக 26 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)




**அற்பனுக்குப் பவிசு வந்தா ஆரைக்கண்டாலும் அப்பக்கோப்பை எண்டுவானாம். அப்பிடி ஒரு எம்.பி. மீடியாக்காரருக்கு 'அப்பக்கோப்பை' பட்டம் குடுக்க வெளிக்கிட்டு, கடைசியில தானே அப்பக்கோப்பையா மாறியிருக்கிறார்.**

**திசைகாட்டி அமைச்சர்மாரெல்லாம் இப்ப வடக்குக்கு படையெடுத்தபடி இருக்கினம். ஒவ்வொருநாளும் ஆரோ ஒரு அமைச்சர் இஞ்ச வாறதும், ஏதும் திட்டங்களை அறிவிக்கிறதும், ஏற்கனவே முந்தின அரசாங்கம் செய்த வேலைத்திட்டங்களை 'ரிப்பன்' வெட்டித்திறந்து வைக்கிறதும் எண்டு ஒரே பரபரப்புத்தான். எதுக்கு இந்த அமைச்சர்மாரின்ர வருகை எண்டதும், எங்களுக்கு ஏன் திசைகாட்டிக்காரர் ஆலவட்டம், குடையெல்லாம் பிடிக்கினம் எண்டதும் சனத்துக்கும் தெரியும். உள்ளூராட்சி எலக்சன் முடியும் வரைக்கும் உப்பிடி அமைச்சர்மாரின்ர படையெடுப்புக்கும், அவையின்ர வாக்குறுதி மழைக்கும் பஞ்சமிருக்காது.**

**அப்படித்தான் கிட்டடியில வலுசக்தி அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வந்தவர். அப்ப ஒரு நிகழ்வில '24 மணித்தியாலமும் இஞ்ச கறண்ட் கிடைக்க நடவடிக்கை எடுப்பன்' எண்டு சொல்லி முடிச்ச கொஞ்சநேரத்திலேயே 'பவர் கட்' ஆகி, அங்க ஒரே சலசலப்பு. அமைச்சரின்ர வாய்முகூர்த்தம் இப்பிடியாப் போட்டுது எண்டு எல்லாரும் கதைச்சுக்கொண்டிருக்க, மீடியாக்காரர் இதைப்பற்றி தங்கட பேஸ்புக்கில போட்டிருக்கினம்.**

**உடனேயே அங்க நிண்ட திசைகாட்டியின்ர 'இளம்' எம்.பி. ஒராள் பேஸ்புக்கைப் பார்த்திட்டு மீடியாக்காரரிட்ட வந்திருக்கிறார். நீங்கள் என்ன அப்பக்கோப்பையோ? ஆரோ வேணுமெண்டே 'றிப் சுவிச்சை' போட்டுக் கரண்டை நிப்பாட்டினதுக்கு இப்பிடி அப்பக்கோப்பை மாதிரி எழுதி இருக்கிறியள்' எண்டு எரிஞ்சு விழுந்திட்டுப் போயிருக்கிறார். ஆள் ஏற்கனவே மின்சாரசபையில வேலைசெய்ததால அந்த எம்.பி. சொல்லுறதிலையும் விசயம் இருக்குமோ? ஆரோ விசமியள்தான் இப்பிடி 'றிப் சுவிச்சை' போட்டுக் கறண்டை நிப்பாட்டி விளையாட்டுக் காட்டுகினமோ?' எண்டு அங்க நிண்டவையும் நினைச்சிருக்கினம். கொஞ்சநேரத்தால அதே எம்.பி. தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு அதே மீடியாக்காரரிட்ட வந்திருக்கிறார். 'தம்பியாக்கள் சொறியடா, அது உண்மையாவே பவர் கட் தானாம். அமைச்சர் இப்பிடி 24 மணித்தியாலக் கரண்டைப் பற்றிச் சொன்னதாலா ஆரோ வேணுமெண்டு இப்பிடிச் செய்திட்டாங்கள் எண்டு நான் நினைச்சிட்டன். நான் சொன்னதை மனசில வைச்சிருக்காதையுங்கோ' எண்டு ஆள் 'ஐஸ்' வைக்க வெளிக்கிட்டிருக்குது. எண்டாலும் கடைசியா அப்பக்கோப்பையானதுதான் பரிதாபம் கண்டியளோ.**

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 03 . 1937



மறைவு
01 . 04 . 2010

## அமரர் மேரி யோசவின் பாக்கியநாதர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

" வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம்
ஆண்டவருக்கே உரியவர்கள்"
(உரோ.14.8)

அன்புடன் நினைவுகூரும்
கணவர் - அ.பாக்கியநாதர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

" மரியன்ஸ்"
கல்லூரி வீதி,
மானிப்பாய்.

(cs.57854) (N-1)

# மரண அறிவித்தல்



## நாகரத்தின ஐயர் ஏகாம்பிகை அம்மா

புளியங்கூடல் ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தின ஐயர் ஏகாம்பிகை அம்மா துன்னாலை கோவிற்கடவையில் நேற்றுமுன்தினம் (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரக்குருக்கள் - குப்புலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், இணுவில் கந்தசுவாமி கோயில் பரம்பரைக்குரு நாகரத்தின ஐயரின் அன்பு மனைவியும், கரீந்திரக்குருக்கள் (கனடா), குகேந்திரக்குருக்கள் (லண்டன்), கார்த்திகேய ஐயர் (கனடா), கலாதரக் குருக்கள் (ஆசிரியர் - யா / அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், குருக்கள் - கோவிற்கடவை பிள்ளையார் ஆலயம், கோவிற்கடவை ஐயப்பன் ஆலயம்) ஆகியோரின் தாயாரும், ருக்மணி அம்மா (டென்மார்க்), காலஞ்சென்ற சத்யபாமா மற்றும் பாலச்சந்திரன் (சபேஸ்), சகுந்தலா ஆகியோரின் சகோதரியும், மேனகா (கனடா), பத்மஸ்ரீ (சீதா), மாலா (கொழும்பு), மைதிலி ஆகியோரின் மாமியாரும், சாருஹாசன், கீர்த்திகா, தாரிகா, வாரணன், வான்மிகா, ஸபரிசசர்மா, காலஞ்சென்ற சாரங்கன் ஆகியோரின் பேர்த்தியும், ஔஷத், ஹார்ணி, மகண்யா, சாத்விக், கிருத்விக் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2025) புதன் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கோவிற்கடவையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரகொண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி,
(கோவில் முன்புறம்)

தகவல்:
குடும்பத்தினர்
கலாதரக்குருக்கள் (மகன்)
077 969 0990

(cr 44718) (N-1)

## வருடாந்த மஹோற்சவம்

யாழ். ஏப்.1


வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சுவாமி சமேத பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை 12 மணிக்கு கொடியெற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (எ-25)

## நோபலுக்கு இம்ரான்!

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான இம்ரான் கானின் பெயர், அமைதிக்கான நோபலுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 12 . 1952



இறப்பு
30 . 03 . 2025

## சின்னையா இராசரத்தினம் (தவம்)

(மரக்கறி வியாபாரி - யாழ்ப்பாணம்)

நாகம்மாள் கோவில் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட சின்னையா இராசரத்தினம் (தவம்) நேற்றுமுன்தினம் (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்வமணி தம்பதியரின் மருமகனும், பவளராணியின் (பவளம்) அன்புக் கணவரும், சுகந்தினி, ஜெசிந்தினி, சுகிர்தன், சுகிர்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரகுநாதன், சுதர்சன், சியாழினி, காலஞ்சென்ற ஜெனகசெல்வன் ஆகியோரின் மாமனாரும், ராகுல், கோகுல், அகுல், சுபர்ணன், அபிவர்ணன், வர்சானா, சாருஜன், லதுஜன், அமீத்தா, ஆரங்கா, ஆரணன், ஆராதனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2025) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 974 9343

(cs.57882) (N-1)

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## சிவபாதம் றுக்மணிதேவி

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட சிவபாதம் றுக்மணிதேவி கடந்த (29.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - திலகவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நமசிவாயம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நமசிவாயம் சிவபாதம் (புத்தொளி) அவர்களின் அன்பு மனைவியும், சிவலோகநாதன் (பிரான்ஸ்), சித்திராதேவி, சித்ரலேகா (கனடா), சிவதனேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகேஸ்வரி, காலஞ்சென்ற அம்பிகைபாகன், மோகனச்சந்திரன், பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆர்த்திகா, நந்தனா, காவியா, கேசவி, கேதுஷன், சேதுரன், தரனி, வைஸ்ணவன், சஜீவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மிரஷின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2025) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி கருக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

ஆனைக்கோட்டை.

(cr 44717) N-1

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# மாற்றாந்தாய் மனப்பான்மை!

கொழும்பு அரசியலில் கடந்த வாரம் இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. ஒன்று உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடையது. மற்றையது, ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னாள் தளபதிகளின் போர்க்குற்றங்களுக்காக பிரிட்டன் விதித்த தடைகளுடன் தொடர்புடையது. இரண்டு விடயங்களும் பார்வைக்கு வேண்டுமானால் வேறாக இருக்கலாம், ஆனால் வலி ஒன்றுதான், கண்ணீர் ஒன்றுதான், எதிர்பார்ப்பும் ஒன்றுதான்.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களை ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னதாக வெளிப்படுத்தியே தீருவோம் என்று அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. இதே அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்தான், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்காக பிரிட்டனால் விதிக்கப்பட்ட தடைகளை மறுத்து ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு ஆதரவாக பிரிட்டனுக்கு அறிக்கை அனுப்பியிருக்கின்றது. போதாக்குறைக்கு, இலங்கைக்கான பிரிட்டன் தூதுவரை நேரில் அழைத்துக் கண்டித்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்களுக்கும், இலங்கையில் இறுதிப் போரின்போது இடம்பெற்றதாகச் சொல்லப்படும் போர்க்குற்றங்களுக்கும் என்ன வித்தியாசம்? இரண்டிலும் அப்பாவிப் பொதுமக்களே கொல்லப்பட்டனர். ஆனால் இந்த அரசாங்கம், ஈஸ்டர் தாக்குதல்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று நினைக்கும் அதேசமயம், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை மூடிமறைக்க முனைகின்றது. ஈஸ்டர் தாக்குதல் மூலம் பலநூறுபேரைப் படுகொலை செய்தவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவேண்டும். இதில் எவருக்கும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், இந்த விடயத்தில் அரசுக்கு இருக்கும் ஆர்வத்தில் பாதியாவது, இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பில் உள்ளதா? என்ற வினா இங்கு பூதாகரமாகின்றது.

இறுதிப்போரின்போது மாத்திரமல்ல, அதற்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் பல தேவாலயங்கள் அரச படைகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகின. நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம், குருநகர் யாகப்பர் தேவாலயம் என ஏகப்பட்ட உதாரணங்கள் இதற்கிருக்கின்றன. ஆனால், இவை எதற்கும் அரசாங்கம் இதுவரை நீதியை வழங்கியதில்லை. குறைந்தபட்சம் அவற்றுக்குரிய விசாரணைகளின் ஆரம்பப் படிநிலைகள்கூட முழுமைப்படவில்லை. எனவே, உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்தாரிகளை வெளிப்படுத்துவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் முனைப்பையும், ஈடுபாட்டையும் வரவேற்கும் அதேநேரம், அந்த ஈடுபாடு மறுவிதமாக தமிழர்களை மாற்றாந்தாய் மனத்துடன்தான் தேசிய மக்கள் சக்தி அணுகுகின்றது என்பதையும் வெளிப்படுத்தவே செய்கின்றது.


வடக்கு - கிழக்கு மக்கள், தமக்கு அபிவிருத்தி மட்டும்தான் தேவையென்றால், அதற்கு அவர்களுக்கு முன்பாக மாற்றுத்தெரிவுகள் பல இருந்தன. அதையெல்லாம் தாண்டி ஜனாதிபதியாக அநுரவையும், அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தியையும் தெரிவுசெய்து, சுதந்திர இலங்கையில் மிகப்பெரிய மாற்றத்தை நிகழ்த்தியிருக்கின்றார்கள் என்றால் அதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில், தமது துன்பங்களுக்கு நீதிகிட்டும் என்ற நம்பிக்கையும் ஒன்று. அதை இந்த அரசாங்கம் காப்பாற்றாவிட்டால் தமிழ் மக்கள் நினைத்த மாற்றம், இறுதியில் ஏமாற்றமாகவே மாறிவிடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


## நாளொரு நல்வார்த்தை

வெற்றி என்பது நீங்கள் ஒவ்வொருநாளும் செய்யும் சிறுசிறு முயற்சிகளின் கூட்டுத்தொகையாகும்.

—ராபர்ட் கோலியர்—




# வெப்பம் நீடிக்கும் மக்கள் அவதானம்



கொழும்பு, ஏப்.1

**தற்போது நிலவும் வெப்பமான வானிலை அடுத்த சில நாள்களுக்கும் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

வடக்கு, வடமத்திய, மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மனித உடலால் உணரப்படும் அளவுக்கு வெப்பநிலை 39 முதல் 45 டிகிரி செல்சியஸ்வரை நிலவக்கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. மக்கள், வெட்ட வெளிகளில் வேலை செய்பவர்கள் போதியளவு திரவங்கள் மற்றும் நீரை அருந்தவேண்டும். முடிந்தபோதெல்லாம், நிழலான இடத்தில் ஓய்வெடுக்கவேண்டும் என்றும் வெளிர்நிற ஆடைகளை அணியலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-25-இ)

## ரயில் டிக்கெட் மோசடி ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.1

கொழும்பு பதுளை ரயில் பயணச்சீட்டுகளை இணையத்தளத்தில் கொள்வனவு செய்து அவற்றை வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளிடம் அதிகவிலைக்கு நீண்டகாலமாக விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் பயணச்சீட்டை ஆயிரத்து 200 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு 13 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துவந்தமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. (எ-இ)

## மதுபான உற்பத்தி அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.1

மதுபான உற்பத்தி இந்த ஆண்டின் முதற்பாதியில் முந்தைய இரு ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 22 வீதம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொது நிதிக் குழுவின் அறிக்கையில் இந்தவிடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மதுவரிகள் காரணமாக அரசாங்கத்தின் வருமானமும் 23 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனால் 2022ஆம் ஆண்டு 26 மில்லியன் லீட்டராக இருந்த நாட்டின் மதுபான நுகர்வு, 2024ஆம் ஆண்டு 19.31 மில்லியன் லீட்டராகக் குறைந்துள்ளது. மதுபான விலை உயர்வு, பொருளாதார நெருக்கடி என்பவை இதற்குக் காரணங்கள்என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-இ)

## முன்னாள் அமைச்சரின் செயலாளர் காரில் துப்பாக்கி

கொழும்பு, ஏப்.1

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரின் செயலாளர் எனக் கூறப்படும் ஒருவரின் காரில் இருந்து கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று முல்லேரியாப் பொலிஸார் தெரிவித்தனர். உரிமம் இன்றித் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டிலும், குடிபோதையில் வாகனம்செலுத்திய குற்றச்சாட்டிலும் அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

## முத்திரைக் கட்டணத்தில் இன்றுமுதல் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப்.1


ஏதேனும் சொத்தை குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்கும் ஒப்பந்த ஆவணப் பத்திரத்துக்குரிய 10 ரூபா முத்திரைக் கட்டணத்தை இன்றுமுதல் 20 ரூபாவாக அதிகரிக்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது. 2006ஆம் ஆண்டுக்கு பின்னர் முதன்முறையாக முத்திரைக் கட்டணம் திருத்தம் செய்யப்படுகிறது.

ஏதேனும் சொத்தை குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ வழங்கும்போது நீண்டகால குத்தகை ஒப்பந்தம் அல்லது வாடகை ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு உரிய முழுமையான காலப்பகுதிக்காக முதற் கட்டணம் உள்ளடங்கலாக நீண்டகாலக் குத்தகை அல்லது வாடகையானது ஒவ்வொரு ஆயிரம் ரூபாவுக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்காக 10 ரூபா முத்திரைக் கட்டணம் இதுவரை காலமும் அறவிடப்படுகிறது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### இராமலிங்கம் சடாட்சரம்

யாழ். அராலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சடாட்சரம் அவர்கள் நேற்று (31.04.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - விசாலாட்சி தம்பதியரின் அன்புப் புத்திரனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரதீபன் (யாழ். போதனா வைத்தியசாலை), பிரமிளா, கண்டீபன் (வவுனியா), மித்திலா (மீசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மலோஜினி (கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை), சிறிநகுலேஸ்வரன், சுசிகலா (வவுனியா), முரளிதரன் (மீசாலை) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இரத்தினம், விசாலாட்சி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, அருளானந்தம் பிள்ளை, பத்மாவதி, கணேஸ்வரி குணபாலசிங்கம், அன்னபூரணம் தேவராஜா, பாலசுந்தரம், திரு. திருமதி இராஜசிங்கம் கமலா, திரு. ஜெயசிங்கம் மற்றும் திருமதி பாலசுந்தரம், திருமதி ஜெயசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், அபிரா, தாமிரா, அமிர்தா, வருந்சி, கோசிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2025) செவ்வாய்க்கிழமை கொடிகாமத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொடிகாமம்,
கச்சாய் வீதி.

**தகவல்: குடும்பத்தினர்.**
பிரதீபன் - 0094 766 142 865
பிரமிளா - 0044 793 1910059
விஜயன் - 0094 776 179 105

(CS) A

## மரண அறிவித்தல்



### தில்லையம்பலம் பத்மநாதன்

(ஓய்வுபெற்ற கணக்காளர் இலங்கை துறைமுக அதிகார சபை)

சரவணையை பிறப்பிடமாகவும் வாசல வீதி கொழும்பு-13 யாழ்ப்பாணம் வசிப்பிடமாகவும் கொண்ட திரு தில்லையம்பலம் பத்மநாதன் அவர்கள் நேற்று (31.03.2025) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணநாதன் (தபாலதிபர்), ஸ்ரீதேவி, யோகநாதன் மற்றும் நகுலாம்பிகை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2025) செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணியளவில் 23, பிரம்படி 1ம் ஒழுங்கை, கொக்குவில் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


23, பிரம்படி 1ம் ஒழுங்கை
கொக்குவில்

தகவல்:
Dr.S. சிவபாதமூர்த்தி
077 315 5100

(CS 2867) V-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
13.09.1949

மறைவு
28.02.2025

கடந்த 28.02.2025 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### கந்தையா பாலபரமேஸ்வரன் (ராசு பத்தர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.04.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு எங்களது துக்கத்தில் பங்கு கொண்டு நேரில் வருகை தந்து மற்றும் தொலைபேசி, சமூகவலைத்தளங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மேலும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அழைப்பிதழ் வழங்கத் தவறியவர்கள் இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்

நன்றி

வேம்பன் வீதி
தெல்லிப்பளை

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மகளிர்தினவிழா

பளை, ஏப் 1

கிளாலி சுய உதவிக்குழு சரித்திர நாய கிகளின் மகளிர்தினவிழா கிளாலி பாடசாலை மைதானத்தில் அண்மை யில் நடைபெற்றது.

பெண்கள் வாழ்வுரிமைக்கழக நிறுவ னங்களின் அனுசரணையுடன் மக ளிர் குழுக்களிடையில் விளையாட்டு கள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ச-25.9)



## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஏப் 1

இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தின் 23ஆவது புனருத் தாரண ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பலரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக்கொடையை வழங்கினர். (ச-41-66)



தமிழ் - முஸ்லிம் நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையில் இப்தார் நோன்பு திறக் கும் நிகழ்வு ஒஸ்மானியாக் கல்லூரிவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மரியம் பள்ளிவாசல் வளாகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற் றும் கட்சியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ச-41-66)



சித்திரை புத்தாண்டு
இம்முறை உங்களுடன்....

# வாணி ரெக்ஸ்

வாடிக்கையாளர்களே!

எதிர்வரும் **தமிழ் சிங்கள புத்தாண்டை** முன்னிட்டு
**வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட**
**புத்தம் புதிய தெரிவுகளுடன்**
அனைத்து விதமான ஆடை வகைகளையும்
**01.04.2025 தொடக்கம் 15.04.2025 வரை**
**10 வீதம்** முதல் **30 வீத** அதி விசேட விலைக்கழிவில்
மனதிற்கு பிடித்த **Trending** ஆன ஆடைகளை
பெற்றுக் கொள்ளலாம்

பெண்களுக்கான சாறி, சல்வார்கள், லெகங்கா,
பட்டுப் பாவாடைகள், ரொப், பாட்டி கவுண், மொடன் சட்டைகள்

சிறுவர்களுக்கான அனைத்து வகையான ஆடை வகைகள்

ஆண்களுக்கான ஆடைவகைகள் அனைத்தையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

Vani Tex
No:81, Grand Bazaar Road,
Jaffna.

021 222 55 78
0777 48 80 93

வாணி ரெக்ஸ்
இல.81, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 01 . 1961



மறைவு 26 . 03 . 2025

## இரத்தினேஸ்வரன் ஜெயராணி

கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரன் ஜெயராணி அவர்கள் (26.03.2025) அன்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரன் (முன்னாள் கிராம சேவையாளர் J/127) அவரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாதேவா மற்றும் சொர்ணம்மா தம்பதியின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம்-இரத்தினம் தம்பதியின் அன்பு மருமகளும் செந்தீபன், கம்சாயினி காலஞ்சென்ற கம்சீவன் மற்றும் கம்சவாணி ஆகியோரின் அன்புத்தாயாரும் வனஜா, நிக்கோலா, திருநாத் ஆகியோரின் அன்பு மாமியாரும் டயானிகா, லோகினிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.03.2025) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயமணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாகலிங்கம் வீதி
கொக்குவில் மேற்கு
கொக்குவில்

(CS 2862) V-1

தகவல்:
குடும்பத்தினர்



வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில், மாணவர்களுக்கான யோகாசனப் பயிற்சிநெறி வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யோகாப் போதனாசிரியர் அச்சுதராஜா கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினார். (ச-25, 66)

## வேலையாட்கள் தேவை

வெல்டர் - Rs 3000.00
அலுமினிய பிற்றிங்- Rs 3000.00
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்)
(காலை 8.30 - மாலை - 5.00 வரை)
தொடர்பு: 077 724 5399

## வேலையாள் தேவை

நுணாவிலில் வீட்டு வேலைகளை தங்கியிருந்து செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை.
(சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்)
076 344 3908

## ஏ.ரி.எம். வேண்டும்

யாழ்ப்பாணம், ஏப் 1

பொன்னாலை - சுழிபுரம் பிரதேசவாசிகளுக் காக ஏ. ரி.எம். இயந்திரம் ஒன்றைப் பொருத்தமான இடத்தில் அமைத்துத்தரு மாறு பிரதேச மக்கள் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத் தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொன்னாலை, மூளாய்வாழ் மக்கள் வட்டுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய பிரதேசங்களுக்குப் பயணம் சென்றே தமது அன்றாட வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் தொடர்புடைய வங்கிகளுடன் பேசி நடவடிக்கைகளை எடுப்பதாக சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பவானந்தராஜா தெரிவித்தார். (ச-125)

# மரண அறிவித்தல்

## நீற்றா இராசமனோகரி வேல்முருகு (நீற்றா)

(ஓய்வுநிலை செயலாளர் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை)

பருத்தித்துறை கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளி, கச்சேரி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நீற்றா இராசமனோகரி வேல்முருகு (நீற்றா) நேற்றுமுன்தினம் (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - செல்வநாயகி அம்மா தம்பதியரின் கனிஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், வேல்முருகு (ஓய்வுநிலைக் கணக்காளர் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், CANE) அவர்களின் பாசமிகு மனைவியும், சரண்ணியாவின் பாசமிகு தாயாரும், லிறோஜனின் (AJ Graphics) அன்பு மாமியாரும், ஆருஜன் (தரம் - 01 மாணவன் சென். ஜோன்ஸ் கல்லூரி), அர்ஷ்விகன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், நாகரத்தினம், தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சம்மந்தியும், சற்குணானந்தராஜா (அவுஸ்ரேலியா), காலஞ்சென்றவர்களான தவராஜா, ராஜசோதி, இராஜேஸ்வரி, இன்பராஜா மற்றும் இராசஞானம், ஜீவராஜா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராஜாராம், சீதாலட்சுமி, ராதா சுந்தரி, ஜெயமணி, ஞானமலர், சீதாதேவி, காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், சேவியர் மற்றும் தங்கத்துரை, நீற்றா சரோஜினி, ரஞ்சனா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.04.2025) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



இல.05, கச்சேரி ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 325 1637, 076 642 8710

தோற்றம் 23.03.1955 மறைவு 30.03.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# திருவள்ளுவர் குருபூஜை விழா

பளை, ஏப் 1

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், முல்லையடி மஹாகாளி சங்கரநாராயணன் ஆலயம், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசெயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், திருவள்ளுவர் குருபூஜை விழா ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதேச செயலர் இ.த ஜெயசீலன் பங்கேற்றார். (ச-25,9)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.1

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திர சேகரப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை கைலாச வாகன திருவிழாவும் 13ஆம் திகதி சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் 14ஆம் திகதி சித்திரை வருடப் பிறப்பு தினமான திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ-இ)

# கண்ணகியம்மனுக்கு அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.1

வட்டக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு தேர்த்திருவிழாவும், 7ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (எ-25)

# ரம்ழான் பண்டிகையையொட்டி இந்திய அரசால் அன்பளிப்பு!



யாழ்ப்பாணம், ஏப் 1

ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு இந்திய அரசாங்கத்தின் அன்பளிப்புப் பொதிகள் யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, தூதரக அதிகாரி சங்கரன் இராஜகோபாலன், வேலணைப் பிரதேச செயலாளர் கை.சிவகரன், முஸ்லிம் மதத்தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,125)

# உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும்!

யாழ்ப்பாணம், ஏப் 1

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பெண் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் மாவட்டச் செயலக வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

யாழ். மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாலம் செயற்றிட்டத்தின் நிதி அனுசரணையில், பிரதேச செயலக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட 15 பெண் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. (ச-25,27-66)





வேலணைப் பிரதேச செயலக "தூய இலங்கை" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், அல்லைப்பிட்டி வெண்புரவி கடற்கரையை அண்டிய பிரதேசம் கடந்த வெள்ளிக்கிழமை சுத்தம்செய்யப்பட்டது. நிகழ்வில் பிரதேச செயலாளர் க.சிவகரன், உதவிப் பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச - 25,9)

# சுற்றுலா முதலீடு கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஏப் 1

சுற்றுலா முதலீடு தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நடைபெற்றது. கலந்துரையாடலில் இந்திய முதலீட்டாளர்கள் இந்தியாவுடன் இணைந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் ஆன்மீகம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலாத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பான சாத்தியப்பாடுகள், மத்திய மாகாண அனுமதிகள் பெறுவதற்கான பொறிமுறைகள் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.. தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். அலுவலகத்தில் சக பணியாளர் ளை அனுசரித்துச் செல்லவும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படு வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கித் கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக் கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்று வீர்கள். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப் பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக் கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்க ளையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளி லும் கூடுதல் கவனம்தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகி விடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்லசெய்திகிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.



# நடப்புச் சம்பியனை வீழ்த்தி வெற்றிப்பாதையில் மும்பை!

**மும்பை, ஏப். 1**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், நடப்புச் சம்பியனான கொல்கத்தாவைத் தோற்கடித்து தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது மும்பை.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. குயின்டன் டி ஹொக் மற்றும் சுனில் நரைன் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினார்கள். குயின்டன் டி ஹொக் ஓர் ஓட்டத்துடனும், சுனில் நரைன் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் ரகானேயும் 11 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப கொல்கத்தா அணி பெரும் சரிவுக்குள் தள்ளப்பட்டது. ரகுவன்சி 26 ஓட்டங்களையும், மனீஷ் பாண்டே 19 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்களைத் தவிர வேறு எவரும் பிரகாசிக்கவில்லை. முடிவில் கொல்கத்தா அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் அறிமுக வீரர் அஷ்வினி குமார் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பைக்கு ரோகித் சர்மா மற்றும் ரிகில்ரன் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினார்கள். ரிகில்ரன் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும், ரோகித் சர்மா 13 ஓட்டங்களுடனும், வில் யக்ஸ் 16 ஓட்டங்களுடனும் ஏமாற்றினார்கள். ரிகில்ரன் அரைச்சதம் கடந்தார். சூரியகுமார் யாதவ் 27 ஓட்டங்களைப் பெற்றார். முடிவில் 43 பந்துகள் மீதமிருக்கையில் வெற்றிபெற்றது மும்பை. (ம)




# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

கொழும்பு, ஏப்.1

அம்பாந்தோட்டை, கொக்கல்லவில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச்சூட்டை நடத்தி தப்பிச்சென்றுள்ளனர். கொக்கல்லப் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

இருதரப்புகளுக்கு இடையே நிலவிய தனிப்பட்ட பகையே துப்பாக்கிச்சூட்டுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (எ-25-இ)

# குற்றச்செயலூடான வருமானம் அரசுடைமையாக்க சட்டவரைவு

குற்றச்செயல்களால் ஈட்டப்பட்ட வருமானத்தை மீட்டு, அவற்றை அரசுடைமையாக்குவதற்கு புதிய சட்டவரைவு ஒன்று கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டவரைவு எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றச்செயல்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தை மீட்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுவது தொடர்பான பல புதிய விதிகளையும் இந்தச் சட்டம் உள்ளடக்கியுள்ளது.

இந்தச் சட்டத்தினூடாக குற்றச்செயல்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தைத் தடைசெய்ய உரிய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது.

அத்துடன் குற்றச்செயல்களின் வருமானத்தை நிர்வகிக்க ஒரு புதிய அதிகாரசபையை நிறுவவும் திட்டமிட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல், போதைப்பொருள் கடத்தல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் பிற ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் நிதிக்குற்றங்கள் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்த விசாரணைகளும் புதிய சட்டத்துக்கமைய மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அரசை...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு [illegible] அவர் இவ் [illegible] ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

'மே 9 சம்பவத்தின்போது செவனகல பகுதியில் வீடொன்று தீப்பிடித்துள்ளது. இந்த வீட்டுக்குரிய இழப்பீட்டை வீட்டு உரிமையாளர் பெறவில்லை. ஆனால் ராஜபக்சதான் இழப்பீட்டை பெற்றுள்ளார். [illegible] உரித்து பத்திரம் வேறொரு [illegible] பெயரில் உள்ளது. அந்த பட்டியலும் விரைவில் வெளியிடப்படும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை நாட்டு மக்களே கட்டியெழுப்பினார்கள். இலங்கை அரசியல் வரலாற்றில் மக்களால் உருவாக்கப்பட்ட அரசாங்கமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். இப்படிபட்ட அரசாங்கத்தை வீழ்த்த முடியாது. நாட்டை மீட்டெடுத்த பின்னரே நாம் திரும்பிப் பார்ப்போம்'- என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களை ஒடுக்குவதற்கு அதிரடிப்படை களமிறக்கம்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்



**கொழும்பு, ஏப் 1**

**நாட்டில்சட்டவிரோதமானநடவடிக்கைகளைஒடுக்குவதற்கும்,பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் 500 சிறப்பு அதிரடிப்படையினர் களமிறக்கப்படவுள் ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித் துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தெற்கில் அண்மையில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச்சம் பவங்களைக் கட்டுப்படுத்த 4 பொலிஸ் குழுக்களை நியமித்துள்ளோம்.

அத்துடன், அம்பலாங்கொடைப் பகுதியில் ஒழுங்க மைக்கப்பட்ட குற்றங்களைச் சமாளிக்க இரண்டு சிறப்புப் பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

பொலிஸ் குழுக்களை நியமிப்ப தைத் தவிர்க்கவே புதியசிறப்புஅதிரடிப்படையினர்களமிறங்கப்படவுள் ளனர். இந்தப்புதியசிறப்புஅதிரடிப்படைஉறுப்பினர் கள் விரைவில் தங்கள் பயிற்சியை முடித்துவிட்டு பணிக்கு வருவார்கள் - என்றார். (ச-இ)

### கொடூரமான...

இறுதிப்போரின்போது இராணுவத் தளப தியாகப் பதவிவகித்த பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:-

படையினருக்குரிய பிரச்சினையை வைத்து அரசியல்வாதிகள் தமக்குப் புள் ளிகளைப் பெறுவதற்கே முற்படுகின்ற னர். மாறாக படையினருக்குரிய புக ழைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக் கவில்லை. அதனால்தான் இன்றளவி லும் பிரச்சினைகள் உள்ளன. படையி னரின் காவலன் என தன்னைக் காண் பித்துக்கொண்ட மஹிந்த ராஜபக்சதான், போலிக் குற்றச்சாட்டுகளை சுமத்தி என் னைச் சிறையில் அடைத்தார்.

நாட்டின் சட்டம் மற்றும் சர்வதேச சட் டத்தை எவரேனும் மீறியிருந்தால் நிச்ச யம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அப்போதுதான் இராணுவத்துக்குரிய ஒழுக்கம் பாதுகாக்கப்படும்.

சுனில் ரத்நாயக்க என்ற நபர் முதலில் ஒருவரைச் சுட்டுக்கொன்றார். அந்தச் சம்பவத்தை மறைப்பதற்காக ஒட்டு மொத்த குடும்பத்தையும் வெட்டிக்கொன் றார். இந்த நபருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. கோத்தாபய ராஜபக்ச அவரை விடுவித்தார். கேட்டால், 'படையி னரை விடுவிக்கின்றோம்' என்றனர்.

எனவே, இராணுவத் தளபதியாக இருந் தாலும்கூட சட்டத்தை மீறி இருந்தால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும். முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னாகொடவுக்கு எதிராக 11 மாணவர் களைக் கடத்திய குற்றச்சாட்டு உள்ளது. 11 மாணவர்களில் ஒருவர் இங்கிலாந்து பல்கலைக்கழகத்துக்குச் செல்ல இருந் தவர். எனவே, கரன்னாகொடவுக்காக இன்று குரல்கொடுக்கும் அரசியல்வாதி கள், தமது குடும்பத்தில் எவருக்கேனும் இப்படி நடந்திருந்தால் நீதியை எதிர் பார்க்க மாட்டார்களா? இப்படியானவர்க ளுக்கு எதிராக சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.

சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச் சாட்டுகளை நான் முற்றாக நிராகரிக்கின் றேன். இப்படி நான் வெளிப்படையாகப் பேசுவதால், படையினரைக் காட்டிக்கொ டுப்பதாக சிலர் முகநூலில் விமர்சிக்கின்ற னர். ஆனால் உண்மையை கதைப்ப தற்கு நான் எப்போதும் அஞ்சியதில்லை. சீருடை அணிந்து தவறிழைத்திருந்தால், அப்படியானவர்களை பாதுகாக்க முற்ப டும் அரசியல்வாதிகள்தான் தேசத்துரோ கிகள்-என்றார். (அ-ம-44)

### மியான்மர்...

எண்ணிக்கை 2 ஆயிரத்து 60ஆக அதி கரித்துள்ளது.

30 வீதமான கட்டட இடிபாடுகளில் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள் ளதாக மீட்புக் குழுவினர் அறிவித்துள்ள னர். இதனால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க் கப்படுகின்றது. (அ-ம)

### புலம்...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சாகர காரியவசம் மேலும் தெரிவித்தா வது:-

இந்த நாட்டில் இனவாதம் மற்றும் அடிப் படைவாதம் என்பன மீண்டும் தலைதூக் குகின்றன. சிலபகுதிகளில்பிக்குகளுக்கு ஒருவேளை தானம் கொடுக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. பிரிவினை வாதிகளே இந்த அரசாங்கத்துக்கு ஒத்து ழைத்தனர் என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அரகலயவின் பின்னாலும் பிரிவினை வாதிகளே இருந்தனர். இந்தப் பிரிவி னைவாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கமை யவே அரசாங்கம் செயற்படுகின்றது என்பது உறுதியாகின்றது. அதேவேளை, ஆளுங் கட்சிபோல் மக்களை அழைத் துவந்து நாம் கூட்டங்களை நடத்த வில்லை. கிராமங்களில் நேரில் களமி றங்கி மக்களை சந்தித்து வருகின்றோம் - என்றார். (அ-ம-44)

### வீதி...

காண பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கிலுள்ள பெரும்பாலான வீதிக ளில் அண்மைக்காலமாக வீதி மின்வி ளக்குகள் இரவு வேளைகளில் ஒளிரா துள்ளதாகவும் அதனால் மக்கள் நெருக் கடியை எதிர்கொள்வதாகவும் அவரைத் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆரம்பகாலத்தில் வீதிவிளக்குகள் மின் சாரசபையால் பொருத்தப்பட்டு, அதற்குரிய பராமரிப்புகள் மற்றும் மின்சாரப் பட்டி யல் பணத்தை ஒவ்வொரு மின் பாவ னையாளர்களும் செலுத்துகின்ற மின் பட்டியலில் சிறுதொகையை மேலதிக மாக அறவிடப்பட்டு செலுத்தப்பட்டது.

எனினும் வீதிவிளக்குகள் பொருத்தப்ப டாத பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இதனால் பாதிக்கப்படுவதால் உள்ளூ ராட்சி சபைகள் தமது சபை எல்லைக்குட் பட்ட மக்களிடம் வரி வசூலிப்பதனால் உள்ளூராட்சிசபைகள் மின்சாரசபை ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்று வீதிவிளக்குகளை பொருத்துதல், பராமரித்தல் மற்றும் மின் கட்டணங் களை செலுத்தும் வகையில் மாற்றங் கள் கொண்டுவரப்பட்டன.

அந்தவகையில் தற்போது வடக்கு மாகா ணத்தில் பொருத்தப்பட்டுள்ள 63 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட வீதிவிளக்குகளுக்கு வருடம் ஒன்றுக்கு 620 மில்லியன் ரூபா கட்டணம் செலுத்தவேண்டும். இந்தக் கட்டண மின்பட்டியல் மின்சாரசபையால் உள்ளூராட்சி சபைகளுக்குத் தொடர்ச்சி யாக வழங்கப்படுகின்றபோதிலும் பல் வேறு காரணங்களைக் கூறி இதுவரை யில் வடமாகாணத்தில் உள்ள எந்த உள்ளூராட்சி சபையும் மின்கட்டணம் செலுத்தவில்லை- என்றார். (அ-ச-28)

### எரிவாயு...

விலையாக 4 ஆயிரத்து 100 ரூபா நிர் ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 168 ரூபாவால் அதிகரித்து புதிய விலை யாக ஆயிரத்து 645 ரூபா நிர்ணயிக்கப் பட்டுள்ளது. (அ-ம-இ)

### பெற்றோல்...

டுள்ளது.

ஒக்டேன் 95 பெற்றோல் விலையும் 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை யாக 361 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஓட்டோ டீசல், மண்ணெண்ணெய் மற் றும் சூப்பர் டீசல் ஆகியவற்றின் விலை யில் மாற்றமில்லை என அறிவிக்கப்பட் டுள்ளது. (அ-ம-இ)

### நாயாற்று...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதா வது:-

முல்லைத்தீவு நாயாறு முகத்துவாரப் பகுதியில் யுவதிகள் சிலர் ஒரு குழுவாக நீராடச் சென்றுள்ளனர். அவர்கள் நீரா டிக் கொண்டிருந்தபோது, மூன்று யுவதி கள் தண்ணீரில் இழுத்துச் செல்லப்பட் டுள்ளனர். இந்த விடயம் தெரியவந்த தைத் தொடர்ந்து, அங்கு நின்ற மீனவர் கள் துரிதமாகச் செயற்பட்டு இரண்டு யுவதிகளை மீட்டுள்ளனர். எனினும், ஒரு யுவதியை மீட்கமுடியாமல் போயுள்ளது. தொடர்ச்சியான தேடுதலின் பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

**ஆபத்து நிறைந்த இடம்**

செம்மலை நாயாறு முகத்துவாரம் மிக வும் ஆபத்தான ஓர் இடமாகும். அங்கு சுற்றுலா செல்பவர்கள் முகத்துவாரப் பகுதிக்கடலில் நீராடுவது மிகுந்த அபா யத்தை உருவாக்கும். அதாவது, கடல் நீர்மட்டம் குறையும்போது ஆற்றுநீர் கடலுக்குள் பாயும். அந்த நேரத்தில் முகத்துவாரப் பகுதியில் நீராடுபவர்கள் ஆற்றிலிருந்துவரும் நீருடன் இழுத்துச் செல்லப்படும் அபாயம் உள்ளது. எனவே, இந்த ஆபத்தைக் கருத்திற் கொண்டு இனியாவது கடற்படையின ரையோ அல்லது பாதுகாப்பு ஊழியர்க ளையோ அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தவேண்டும் என்று ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-19)

### ஜனாதிபதி...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அண்மையில் கோரப் பட்ட பகிரங்க முன்மொழிவைத் தொடர்ந்தே இந்தக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. இது தொடர்பான சைவ மாகா சபையின் தீர்மானம் உபவேந்தர் ஊடாக ஆளுநருக்கும் அனுப்பிவைக் கப்பட்டுள்ளது. (அ-ம-125)

### வாக்காளர்...

மாவட்டச் செயலகங்களுக்கும் விநியோ கிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின் றது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ள நிலை யில் எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆகிய தினங்களில் தபால்மூல வாக்க ளிப்பு நடைபெறவுள்ளது. இந்த மூன்று தினங்களில் வாக்களிக்க தவறும் அரச உத்தியோகத்தர்கள் ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய இரண்டு தினங்களில் வாக்க ளிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

### டிரான்...

தப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டு மாத்தறை வெலி கம பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட் டலொன்றுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு தொடர்பிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. விசார ணைகளை நிறைவுசெய்துவிட்டு நேற்று மாலை அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறி யுள்ளார். (அ-ம-இ)

### கோமாவில்....

அனுராதபுரம் கொரவப்பொத்தான சந்தி யில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி ஏற்பட்ட விபத்தில் அந்த நபர் கோமா நிலைக்குச் சென்றிருந்தார். இதையடுத்து இரண்டு மாதங்கள் அனு ராதபுரம் மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச் சையின்போது உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவா யம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள்; பிரிட்டன் தூதுவருடன் ரணில் பேச்சு

கொழும்பு, ஏப் 1

ஸ்ரீலங்காவின் முன்னாள் இராணுவ, கடற்படைத்தளபதிகள் மீதான பிரிட்ட னின் தடை தொடர்பில், பிரிட்டனின் தூதுவர் பற்றிக்கை, முன்னாள் ஜனாதிபதி ரணில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான பிரிட்டனின் தடை, எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராகப் பிரிட்டன் கொண்டுள்ள கடினமான போக்கின் வெளிப்பாடாகவும் பார்க்கப்படுகின்றது. ஆதலால், தடைகளை நீக்குவது தொடர்பிலும், பிரிட்டனின் தீர்மானங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. எனினும், முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கும், தூதுவர் பற்றிக்கும் இடையிலான கலந்துரையாடல் தொடர்பில் எந்த உத்தியோகபூர்வத் தகவல்களும் வெளிவரவில்லை. எனினும், அந்தத் தகவல்களை வெளிப்படுத்தாமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"எனது நிலைப்பாட்டை நாட்டுக்கும் உல குக்கும் சத்தம் போட்டுக் கூறாவிட்டாலும், இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிக்கவில்லை. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என என்னைப் பலரும் தென்னிலங்கையில் விமர்சித்தனர். இருப்பினும் வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டதில்லை" என்று இந்தச் சந்திப்புத் தொடர்பில் ரணில் தெரிவித்துள்ளார். (ம)

# தேசபந்துவை பதவிநீக்கும் பிரேரணை சட்டரீதியற்றது

## விஜேதாச ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.1

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பான பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொண்டமை நாடாளுமன்ற அதிகாரத்தை மலினப்படுத்துவதாகும் என்று முன்னாள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேசபந்து தென்னக்கோனுக்கு வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பதவி அனுமதிக்கப்பட்டதல்ல என்று உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவொன்றை வழங்கியிருந்தது. இந்தநிலையில் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பான பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொண்டுள்ளமை நாடாளுமன்ற அதிகாரத்தை மலினப்படுத்துவதாகும்.

உயர்நீதிமன்ற உத்தரவுக்கமைய தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபர் அல்லர். உயர்நீதிமன்ற உத்தரவு இன்னமும் செயற்பாட்டிலேயே உள்ளது. உயர்நீதிமன்ற உத்தரவு அவ்வாறு இருக்கையில் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு பிரேரணை ஒன்றைக் கையளித்துள்ளனர்.

- இவ்வாறு பிரேரணை ஒன்றை பதவியில் இருக்கும் பொலிஸ்மா அதிபருக்கு எதிராக மட்டுமே சமர்ப்பிக்கமுடியும். சட்டரீதியான அதிகாரம் இல்லாத ஒன்றையே இவர்கள் மேற்கொள்கின்றனர்-என்றார்.

(எ-இ)



# யாழ்ப்பாணத்தில் இராணுவத்தளபதி

இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ யாழ். மாவட்டத்துக்கு அண்மையில் வருகைதந்தார். வரணி மத்திய கல்லூரியில் மண்டபத்துக்கு அடிக்கல் நாடும் நிகழ்வில் இராணுவத்தளபதி கலந்துகொண்டார்.

அத்துடன் இராணுவத்தளபதி சர்வமதத் தலங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் மதத் தலைவர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-இ)

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பலசரக்கு கடைக்கு பொருட்கள் பொதி செய்ய மற்றும் இதர வேலைகளுக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் மட்டும் தேவை
சம்பளம்: 1800+300 (மதிய உணவு)
தொடர்பு: 077 628 0685
076 915 8072

**தேவை**

AD LICENCE உள்ள சாரதி தேவை யாழ்நகர் (350 கன்ரர்)
சம்பளம் - 60000/=
தொடர்பு: 076 821 9414

**Smart Science Academy**
**A/L 2027 கணித விஞ்ஞானப் பிரிவு**
ஆரம்பம் APRIL 03
அனுமதிகள் பெறப்படுகின்றன
PHYSICS ▶ T.சம்பந்தன்
CHEMISTRY ▶ S.சுரேஸ்குமார்
BIOLOGY ▶ K.சுதா
COM.MATHS ▶ V.ஹரிவண்ணன்
154A, Navalar Road, Jaffna.
Tel:0777 872 903, 0775 559 028

**வேலையாட்கள் தேவை**

கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ் நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
➤ முகாமையாளர்
➤ காசாளர்
➤ அலுவலக உதவியாளர்
➤ பேருந்து நடத்துநர்
➤ சாரதி (கொழும்பில் தங்கி நின்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது.
(CS/2866) V-1
தொடர்பு:- 076 440 8953

**மணமகன் மற்றும் மணமகள் தேவை**

- யாழ். இந்து 1970ஆம் ஆண்டு பிறந்த கனடாவில் வசிக்கும் விவாகரத்தான மணமகளுக்கு 55 வயதுக்கு மேற்பட்ட மணமகன் தேவை.
- யாழ். இந்து 1969 ஆம் ஆண்டு பிறந்த உயர் பதவியில் உள்ள பிரிந்துவாழும் (விவாரத்து செய்யப்படவில்லை) மணமகனுக்கு உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ மணமகள் தேவை.

தொடர்பு: stepglow6@gmail.com

**DMI யாழ்நகர்**
**A/L - 2027 கலை, வர்த்தகம்**
ஆரம்பம் - 05.04.2025
(சனி) காலை 9.00 மணி

**வர்த்தகம்**
(தமிழ், ஆங்கிலமொழி மூலம்)
- கணக்கீடு - D.Sam
- வணிகக்கல்வி - T.S.ரிஷி
- பொருளியல் - M.லிஜிதன்
- ICT - N.அம்பி
- A.பிலக்ஷன்

**கலை**
- தமிழ் - R.S. சந்திரசேகர்
- இந்துநாகரிகம் - P. ஜோதீஸ்வரன்
- வரலாறு - M. பத்மன்
- புவியியல் - N. பாபு
- அரசியல் - K.S. இளங்கோ
- அளவையியல் - E.S. பவன்
- விவசாயம் - V. சசி
- கிறிஸ்தவம் - M.ஸ்ரீபன்
- நாடகம் - K.மங்களேஸ்
- ஊடகம் - K.V.நவநீதம்
- மனைப்பொருளியல் - V. சசி
- ICT - N. அம்பி
- A. டிலக்ஷன்

(cs.2839) (N-1)
077 848 0604

**பணியாளர்கள் தேவை**

மந்திகையில் இயங்கும் விற்பனை நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை
தொடர்புகளுக்கு :
0756419450

**கடைகள் வாடகைக்கு**

இடம் : சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் 40 அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட 2 கடைகள் குளியலறை மற்றும் தங்குமிட வசதிகள், வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.
தொடர்புகளுக்கு :
0756419450

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் வடக்கில் 13 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
* இரண்டு பரப்பாகவும் 11/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 1 பரப்பின் விலை (1200000) பன்னிரண்டு இலட்சம் ரூபாய்.
* சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
* செம்மண் நண்ணீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடி பாதை.
* உரும்பிராய் இந்துக் கல்லூரி 1 KM தூரம்
* உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவில் 1 1/2 KM தூரம்.
* தரகர் தேவையில்லை.

தொடர்பு: 076 990 3039
077 468 3354
(CS 57886) V-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-483 1111   செய்தி : news@uthayan.com   விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org